# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்
சென்னை - 600 025.

**உ. சகாயம்,** இ.ஆ.ப.,
துணைத்தலைவர்

ஆர். சி. எண். 989 / மு. அ. அ. (2) / 2018   நாள்: 12.11.2018

அன்புடையீர்,

பொருள் : அறிவியல் நகரம், சென்னை – 25 – “எங்கும் அறிவியல்” – தமிழ் மாத இதழ் வெளியிடுதல் – அறிவியல் கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் – கோருதல் – தொடர்பாக.

----

அறிவியல் நகரம் தமிழகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கான அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. தற்போது இம்மாணாக்கர்களுக்காகவும் – பொது மக்களுக்காகவும் அறிவியல் விழிப்புணர்வை மேலும் வலுவாகப் பரவச் செய்ய “எங்கும் அறிவியல்” என்ற தமிழ் மாத இதழினை அறிவியல் நகரம் விரைவில் வெளியிட உள்ளது.

இவ்விதழை வெளியிடுவதன் நோக்கம் தமிழக மாணாக்கர்களுக்கு அனைத்து அறிவியல் செய்திகளையும் தாய்மொழித் தமிழிலேயே கொண்டு சேர்ப்பதாகும். பூமிப்பந்தில் முன்னேறிய நாடுகள் அனைத்தும் தங்கள் மண்ணின் மொழியிலே – தாய் மொழியிலே தங்கள் வருங்காலத் தலைமுறைக்கு அறிவியலை உள்ளடக்கிய கல்வியினை அளித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள மாணாக்கர்கள் மற்றும் பொது மக்களும் அறிவியல் செய்திகளை தமிழ் மொழியில் படித்து அறிந்து கொள்ள ஏதுவாக “எங்கும் அறிவியல்” என்கிற மாத இதழ் அனைவரின் பங்களிப்புடன் முற்றிலும் தமிழ் மொழியில் வெளிவருகிறது.

இவ்விதழ் அறிவியல் கட்டுரைகள், அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகள், பண்டைய தமிழக அறிவியல் பற்றிய குறிப்புகள் மற்றும் பள்ளி மாணாக்கர்களால் கேட்கப்படும் அறிவியல் வினாவிற்கு விடை அளித்தல் என்று பல வகையான தொகுப்புகளை உள்ளடக்கியதாகும்.

# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்

சென்னை - 600 025.


பள்ளி மாணாக்கர்களும் அறிந்துக் கொள்ளும் வகையில் ஆசிரியர்கள் ஆய்வு செய்திருந்தால் அதன் முடிவுகளை ஒட்டியோ அல்லது பிற அறிவியல் செய்திகளையே கட்டுரை வடிவில் வழங்கிட கோரப்படுகிறது. மேலும் ஆராய்ச்சி மாணாக்கர்கள் மற்றும் இதர மாணாக்கர்களிடம் இருந்து அறிவியல் கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் கோரப்படுகிறது.

பள்ளி மாணாக்கர்களிடம் இருந்து அறிவியல் கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் அறிவியல் கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. மாணாக்கர்களால் கேட்கப்படும் சிறந்த கேள்விகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். இக்கேள்விகளுக்கான பதில்கள் எங்கும் அறிவியல் இதழில் பிரசுரிக்கப்படும்.

அறிவியல் கட்டுரைகள் தமிழ் மொழியில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமலும் மற்றும் துணுக்குகள் 10 வரிகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். இவைகளை அறிவியல் நகரம் வெளியிடும் "எங்கும் அறிவியல்" என்ற இதழின் engumariviyal@gmail.com மின்னஞ்சல் முகவரி அல்லது துணைத்தலைவர், அறிவியல் நகரம், பிர்லா கோளரங்க வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை 600 025 என்ற முகவரிக்கோ அனுப்பலாம். அறிவியல் கட்டுரைகள் / துணுக்குகள் / கேள்விகள் எழுதி அனுப்புவோர் அறிவியல் நகர இணைய தளத்தில் www.sciencecitychennai.in கொடுக்கப்பட்டுள்ள தன்விவரக்குறிப்பு படிவத்தினை பதிவிறக்கம் செய்து நிரப்பி அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

துணைத்தலைவர்